بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:7, ரபியுல் ஆகிர், 1427, பக்கங்கள்- 12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## உடல் நலம் விசாரிப்போம்

*– இப்ராஹீம் மதனீ. M.A*

இஸ்லாம் வெறும் ஆன்மீகத்தை மட்டும் கூறக்கூடிய மார்க்கமல்ல. மாறாக இஸ்லாம் முழு வாழ்க்கைத் திட்டத்தையும் எடுத்தியம்பக் கூடிய மார்க்கமாகும். மனித சமுதாயத்தின் அமைதிக்கு முழு வழிகாட்டி இஸ்லாம் ஆகும். சமுதாய நலன்களை முக்கியப்படுத்துவதிலும், மனித நேயம் வளர்ப்பதிலும், பிறர் உரிமைகளை பேணுவதிலும் இஸ்லாம் முன்னிலை வகிக்கிறது. இந்த வரிசையில் நோயாளியை உடல் நலம் விசாரித்தல் பற்றி இஸ்லாம் கூறும் ஒழுக்கங்களையும் நன்மைகளையும் தெரிந்து கொள்வோம்.

### உள்ளே

**அன்பில் திளைக்கச் செய்யுங்கள் - 5**
**தமிழ்நாடு சில அரிய தகவல்கள் - 6**
**உங்களுக்குத் தெரியுமா? - 7**
**ஆதாமின் மகனே - 8**
**கொரில்லா (அறிவியல் தொடர்) - 10**
**குறுக்கெழுத்துப் போட்டி- 12**

### நோயுற்ற ஒரு முஸ்லிம் சகோதரரின் உடல் நலம் விசாரித்தல் கடமையாகும்

ஒருவர் நோயுற்றால் இயல்பிலேயே அவருடைய மனதில் கவலையும் சஞ்சலமும் குடிகொண்டுவிடுகின்றது. அதுவும் கொஞ்சம் பெரிய நோயாக இருந்தால் சொல்லத் தேவையில்லை. படபடப்பும் பயமும் அதிகரித்து விடும். வீட்டில் உள்ளவர்களின் நிலையோ அதைவிட மோசமாக இருக்கும், குறிப்பாக நோயுற்றவர் வீட்டுப் பொறுப்பாளியாக இருந்தால், அதுவும் நம் போன்று வெளிநாடுகளில் வாழ்பவர்களாக இருந்தால். இந்த நேரத்தில் யாராவது அவரிடம் சென்று ஆறுதல் வார்த்தைகளையும் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்யும் போது நோயாளியின் உள்ளத்தில் உள்ள பெரும் சுமை நீங்கியது போல் இருக்கும். இதை அனுபவ ரீதியாக நாம் நமது வாழ்வில் பார்க்கின்றோம். இது போன்ற உயர் நோக்கங்களைக் கருதியே நோயாளியை உடல் நலம் விசாரிப்பதை இஸ்லாம் கடமையாக்கியிருக்கின்றது. நோயாளியை சந்திக்கச் சென்றவர் அவரின் சுக நிலைபற்றி விசாரித்து அவரின் நோய் நீங்க அல்லாஹ்விடத்தில் துஆ செய்ய வேண்டும். இன்னும் அல்லாஹ்வின் சோதனைகள் வரும்போது பொறுமை கொள்வதையும் அதன் சிறப்புகள் பற்றியும் அவரிடம் கூறவேண்டும். எந்த வார்த்தைகளைப் பேசினால் அவர் சந்தோஷமடைவாரோ அந்த வார்த்தைகளைத்தான் பேச வேண்டுமே தவிர அவரின்

***(தொடர்ச்சி 3–ஆம் பக்கம் பார்க்க..)***

## குர்ஆனில் கருவளர்ச்சி

*–அஹமது பாக்கவீ. M.A*

கருவளர்ச்சியில் காணப்படும் படிநிலைகளில் கரு எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்து மனித உருவைப் பெறுகிறது என்பதற்கு குர்ஆனில் ஆதாரமில்லை என முன்வைக்கப்படும் வாதத்தையும். விலங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கருவியல் சான்றிதழையும் குர்அன் முற்றாக மறுத்து நாத்திக வாதத்திற்கு சாவு மணி அடிக்கிறது.

நாத்திகச் சிந்தனையில் வெளிப்படும் ஐயத்தைப் போக்கி விலங்கிலிருந்து மனிதன் தோன்றவில்லை எனும் தன்னுடைய கூற்றை நிறுவிக்காட்ட கருவியல் குறித்த தன்னுடைய ஆழ்ந்த ஞானத்தை கீழ்க்காணும் வசனங்களில் ஓங்கி ஒலிக்கிறது திருமறைக் குர்ஆன்!.

அருள்மறை குர்ஆன் கூறுகிறது:

**பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம், பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப்பிண்டம் ஆக்கினோம், பின்னர் அத்தசைப் பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம், பின்னர் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம், பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன்: (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (அல்-குர்ஆன் 23: 12-14)**

கருவியலில் காணப்படும் படிநிலைகள் என்னவென்றும், அந்தப் படிநிலைகளில் கரு எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்றும் திருமறை எவ்வளவு தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றது.

நூற்றுக்கணக்கான வருடங்கள் பற்பல விஞ்ஞானிகளின் இடைவிடாத உழைப்பால் ஆய்வுக் கூடங்களில் கருவுற்று நுண்ணோக்கியால் பிரசவம் பார்த்து நவீன அறிவியல் உலகால் மட்டுமே ஈன்றெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அதிநவீன கருவியல் கண்டுபிடிப்பையல்லவா, இம்மாமறைக் குர்ஆன் ஏழாம் நூற்றாண்டிலேயே கூறி நிற்கிறது! இதற்கீடாகவா மற்றொரு அற்புதம் இப்பேரண்டத்தில் காணப்போகிறது?.

எதை, ஏற்பதாக இருந்தாலும் அதற்கு அறிவியல் ஆதாரம் உண்டா எனத் தேடும் அறிவியல் அன்பர்களே! இந்த அறிவியல் சான்று ஒன்று போதாதா? இம்மாமறை மெய்யாகவே மனித சக்திக்கு அப்பாற்பட்ட உண்மையான இறைவேதம் என உங்கள் பகுத்தறிவு ஏற்பதற்கு!.

நவீன அறிவியல் உலகம் கருவியலின் படிநிலையை விந்திலிருந்து துவங்கும்போது திருக்குர்ஆன் அதற்கும் ஒருபடி மேல் சென்று, விந்திற்கும் முந்திய படிநிலை ஒன்று

இருப்பதாகவும், அந்தப் படிநிலையில் களிமண் சத்திலிருந்து விந்து உருவாக்கப்படுகிறது எனவும் கூறுகிறது.

நீரும், மண்ணும் இணைந்து உருவாகும் களிமண்ணின் சத்துக்களை (மண்ணின் சத்து என்னும் மறைமொழி அறிவியல் மொழியில் "இரசாயணப் பொருட்கள்" எனப் பொருள்படும்) மண்ணிலிருந்து நேரடியாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களின் வாயிலாகவோ அல்லது அவைகளை உண்டு வாழும் விலங்கினங்களின் மாமிசம் வாயிலாகவோ மனிதன் பெற்று தனக்கேற்ற சத்துப் பொருட்களைத் (இரசாயணச் சேர்மங்களை) தயாரிக்கிறான் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு மனித உடலில் ஈடுபடும் இரசாயனக் கிரியைகளில், விந்தினை தயாரிக்கும் உயிரியல் இரசாயன வினைகளும் இருக்கின்றன என்பதும், இந்த வினைகளின் போது விந்தணுக்களின் மூலச் செல்கள் மைட்டாசிஸ் முறையிலும், அதன் பிறகு மியோசிஸ் முறையிலும் பிளவுற்று பெருகி அதன் பிறகு ஸ்பெர்மோ ஜெனிசிஸ் முறையில் விந்தணுவாக மாற்றப்படுகின்றன என்பதை நவீன கருவியல் கண்டுபிடிப்புகள் நிரூபித்துள்ளன.

எனவே

களிமண் சத்திலிருந்து விந்தணுவை உருவாக்கும் படிநிலை ஒன்று உடலுக்குள் நடைபெறுவதாக திருமறை கூறியதை நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக்கின்றன.

இவ்வாறு மானிடப் படைப்பின் கருவியலை திருக்குர்ஆன் உயிரியல் இரசாயனத்திலிருந்து (Bio-Chemistry) துவங்கியிருப்பதும், அவனுடைய உடலின் மூலப் பொருட்கள் மண்ணிலிருந்து பெறப்பட்டதாகக் கூறி அவனை விலங்கொத்தவனாக மட்டுமின்றி தாவரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கிய உயிரினம் எனும் ஒருமித்தப் பார்வையில் அணுகியிருப்பதும் பொதுவாக உயிரியலிலும், சிறப்பாகக் கருவியலிலும் திருமறை கொண்டுள்ள ஞானத்தின் ஆழ, அகலங்களைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**"மனிதனை நாம் களிமண் சத்திலிருந்து படைத்தோம் பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் விந்தாக ஆக்கினோம்"**

தாவரங்கள் மண்ணிலிருந்து முளைத்து வருவதால் அவை மண்ணிலிருந்தே உற்பத்தியாகின்றன என்பதில் யாருக்கும் ஐயம் எழ வாய்ப்பில்லை. ஆயினும் விலங்கினங்களும், மனிதர்களும் கருப்பைகளில் உருவாக்கப் படுவதால் அந்த உயிரினங்களின் உடல்களும் மண்ணின் சத்துப் பொருட்களால் (இரசாயணப் பொருட்களால்) உருவாக்கப்படுபவை தானா? என்பதில் சிலருக்கு ஐயமிருக்கலாம். ஆயினும் நவீன அறிவியல் உலகின் இரசாயனப் பகுப்பாய்வுகள் இந்த ஐயத்தைப் போக்கி விடுகிறது.

மனிதன் மற்றும் பாலூட்டும் விலங்குகளின் உடலை வேதியல் பகுப்பாய்வு செய்த விஞ்ஞானிகள் அவ்வுயிரினிங்களின் உடல்களை உருவாக்கியிருக்கும் பொருட்களை கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறார்கள்:

1. பிராணவாயு (Oxygen) 65 சதவீதம்
2. கரி (Carbon) 18 சதவீதம்
3. நீரகம் (Hydrogen) 10 சதவீதம்
4. நைட்ரஜன் (Nytrogen) 3 சதவீதம்
5. சுண்ணாம்பு (Calcium) 2 சதவீதம்
6. பாஸ்பரஸ் (Phosphorus) 1 சதவீதம்

மேற்கண்ட பொருட்கள் மனிதன் மற்றும் பாலூட்டிகளின் உடலை உருவாக்குவதில் மிகுதியாகப் பயன்படும் "மாக்ரோ தனிமங்கள்" என்றும் எஞ்சிய ஒரு சதவீதம் அவைகளின் உடலில் சிறிய அளவில் பயன்படும் "மைக்ரோ தனிமங்கள்" என்றும் பகுப்பாய்வுகள் கூறுகின்றன. மைக்ரோ தனிமங்களில் காணப்படும் அலுமினியம், டைட்டோனியம், போன்றவைகளின் அளவை விஞ்ஞானிகள் கணித்தபோது அவை வெறும் 0.001 சதவீதம் மட்டுமே காணப்பட்டன. எனவே மனித உடலில் காணப்படும் மைக்ரோ தனிமங்களின் பட்டியில் மிக நீண்டதாகவும், அவற்றுள் சிலவற்றின் அளவுகள் குறிப்பிட்டுச் சொல்ல முடியாதபடி மிகக் குறைவே எனவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

மனித உடலில் இதுவரை மொத்தம் எழுபது தனிமங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் அவைகளில் முன்னர் குறிப்பிட்ட ஆறுவகை மாக்ரோ தனிமங்கள் தவிர ஏனைய யாவும் எஞ்சிய ஒரு சதவீதத்தைச் சார்ந்த மைக்ரோ தனிமங்களே எனவும் பகுப்பாய்வுகள் கூறுகின்றன. இவைகளில் தாமிரம், கோபால்டு, மாங்கனீஸ், வினேடியம், அயோடின், மாலிப்டினம், துத்தநாகம் போன்றவை மட்டுமின்றி சர்வ பட்சினி எனப் பெயர்பெற்று கந்தக அமிலத்தைவிட வினைவீரியம் மிக்க ∴புளூரின் (Fluorin) போன்றவைகளும் ரேடியம், யுரேனியம் போன்ற கதிரியக்கப் பொருட்களும் உள்ளடங்கி இருக்கின்றன எனவும் அறிவியல் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட பொருட்கள் யாவும் பூமியில் காணப்படும் இரசாயணத் தனிமங்களே என்பதை நாம் அறிவோமல்லவா! ஆகவே இரசாயணத் தனிமங்களாக விளங்கும் மண்ணின் சத்துப் பொருட்களிலிருந்தே மனிதன் தோற்றுவிக்கப்பட்டான் எனக்கூறும் திருமறை வசனத்தை நவீன அறிவியல் உலகின் வேதியியல் பகுப்பாய்வுகள் நிரூபிக்கின்றன.

இப்போது மனித உடல் உருவாக்கப்பட்டிருப்பது மண்ணின் சத்துப் பொருட்களால்தாம் என்பதை விளங்கிக் கொண்டோம். அதோடு தன்னைப் போன்றே உடலமைப்பைக் கொண்ட தன் குழந்தையை உருவாக்குவதற்கு அவன் விந்துச் செல்களையே வெளிப்படுத்துகிறான் என்பதும் நமக்குத் தெரியும். எனவே விந்திலிருந்து உருவாக்கப்படும் மனித உடல்கள் மண்ணின் சத்துப் பொருட்களாக இருப்பதால் இந்த மண்ணின் சத்துப் பொருட்களே ஒரு காலகட்டத்தில் விந்தாக இருந்தது என்பதில் இதற்கு மேல் யாருக்கும் ஐயம் எழ வாய்ப்பில்லை அல்லவா?

ஆகவே நாம் ஆய்விற்கெடுத்துக் கொண்ட திருமறை வசனம்

**"மனிதனை நாம் களிமண் சத்திலிருந்து படைத்தோம் பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் விந்தாக ஆக்கினோம்"**

எனக் கூறியதை நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் நிரூபித்து நிற்கின்றன.

***(தொடரும்)***

***(இன்ஷா அல்லாஹ்)***

*(முதல் பக்கத் தொடர்ச்சி (உடல் நலம்...)*

மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் வார்த்தைகளை முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

## உடல் நலம் விசாரித்தல் பற்றிய நபி மொழிகள்

1) நோயாளியை உடல் நலம் விசாரித்தல், 2) ஜனாஸாவை (நல்லடக்கம் செய்ய) பின் தொடர்ந்து செல்லுதல், 3) தும்மியவருக்கு (யர்ரஹ்முகல்லாஹ் எனக்கூறி) துஆச் செய்தல், 4) சத்தியம் செய்தவரின் சத்தியத்தை (அது நன்மையானதாக இருந்தால் அதனை) நிறை வேற்றி வைத்தல். 5) அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவி செய்தல், 6) அழைப்புக் கொடுத்தவருக்கு (விருந்துக்கு) பதிலளித்தல் 7) ஸலாமை (மக்களிடையே) பரப்புதல் ஆகிய (ஏழு) விஷயங்களை நபி(ஸல்) எங்களுக்கு ஏவினார்கள்.

*அறிவிப்பாளர் : பராஉ பின் ஆஜிப்(ரலி)*
*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்*

நபி(ஸல்) கூறினார்கள்: ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமிடம் ஐந்து உரிமைகள் உள்ளன. 1) ஸலாமுக்கு பதிலளித்தல் 2) நோயாளியை உடல் நலம் விசாரித்தல் 3) ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்லுதல், 4) அழைப்புக்கு (விருந்துக்கு) பதில் அளித்தல், 5) தும்மியவருக்கு (யர்ரஹ்முகல்லாஹ் எனக்கூறி) துஆச் செய்தல்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)*
*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்*

நபி(ஸல்) கூறினார்கள்: நிச்சயமாக கியாமத் நாளில் அல்லாஹ் (மனிதர்களை அழைத்து) “ஆதமின் மகனே! நான் நோய்வாய்ப் பட்டிருந்தேன். நீ ஏன் என்னை உடல் நலம் விசாரிக்கவில்லை?” என கேட்பான். அப்பொழுது அடியான், “என் இரட்சகனே! நான் உன்னை எவ்வாறு உடல் நலம் விசாரிக்க முடியும்? நீயோ அகிலத்தாரின் இரட்சகனாக இருக்கிறாய்!” என்று பதில் அளிப்பான். அப்பொழுது அல்லாஹ் “என் அடியான் நோய்வாய்ப்பட்டிருந்தான், அவனை நீ உடல் நலம் விசாரிக்கவில்லை என்பதை நீ அறிவாயா? நீ அவனை உடல் நலம் விசாரித்திருந்தால், அவனிடம் என்னை நீ பெற்றுக் கொண்டிருப்பாய் என்பதை நீ அறிவாயா? என்று கூறுவான். “ஆதமின் மகனே! நான் உன்னிடம் உணவைக் கேட்டேன், நீ எனக்கு உணவளிக்க வில்லை?” என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு அடியான் “என் இரட்சகனே! நான் எவ்வாறு உனக்கு உணவளிக்க முடியும், நீயோ அகிலத்தாரின் இரட்சகனாக இருக்கிறாய்!” என்று கூறுவான். அதற்கு அல்லாஹ் “என் இன்ன அடியான் உன்னிடம் உணவைக் கேட்டான். நீ அவனுக்கு உணவை அளிக்கவில்லை என்பதை நீ அறிவாயா? நீ அவனுக்கு உணவளித்திருந்தால், அவனிடம் என்னை நீ பெற்றுக் கொண்டிருப்பாய்! என்பதை அறிவாயா?” என்று கூறுவான். “ஆதமின் மகனே! நான் உன்னிடம் எனக்கு தண்ணீர் புகட்டுமாறு வேண்டினேன். நீ எனக்கு தண்ணீர் புகட்டவில்லை” என்று அல்லாஹ் கூறுவான். அதற்கு அடியான். “என் இரட்சகனே! நான் எவ்வாறு உனக்கு தண்ணீர் புகட்ட முடியும்! நீ அகிலத்தாரின் இரட்சகனாக இருக்கிறாய்” என்று கூறுவான். அதற்கு அல்லாஹ், “என் இன்ன அடியான் உன்னிடம் தனக்கு தண்ணீர் புகட்டும்படி வேண்டினான். நீ அவனுக்கு தண்ணீர் புகட்ட மறுத்து விட்டாய்! நீ அவனுக்கு தண்ணீர் புகட்டியிருந்தால் அவனிடம் என்னை நீ பெற்றுக் கொண்டிருப்பாய் என்பதை நீ அறிவாயா?” என்று கூறுவான்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)*
*ஆதாரம் : முஸ்லிம்*

## முஸ்லிம் அல்லாதவரையும் நோய் விசாரிக்கச் செல்லுதல்

யூத மதத்திலுள்ள ஒரு சிறுவன் நோயுற்றிருந்தான். அவனை நோய் விசாரிப்பதற்கு சென்றிருந்த நபி(ஸல்) அவர்கள் அப்பையனின் தலைப்பக்கமாக உட்கார்ந்து அப்பையனிடம் நீர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள் எனக் கூறினார்கள். அப்பையனின் தலைப்பக்கம் நின்று கொண்டிருந்த தன் தந்தையை அப்பையன் பார்த்தான். அபுல்காசிமுக்கு கட்டுப்படு என அப்பையனின் தந்தை கூறினார். அப்பையன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். என் மூலம் அப்பையனை நரகத்திலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என கூறியவாறு எழுந்து சென்றார்கள்.

*அறிவிப்பாளர் : அனஸ்(ரலி)*
*ஆதாரம் : அபூதாவூத்*

## நோய் விசாரிக்கச் செல்வதில் கிடைக்கும் நன்மைகள்

1. நபி(ஸல்) கூறினார்கள்: நோயாளிகளை உடல் நலம் வினவுங்கள்! பசியாளிக்கு உணவளியுங்கள்! கைதியை (உரிய ஈட்டுத்தொகை வழங்கி) விடுதலை செய்யுங்கள்.

*அறிவிப்பாளர் : அபூமூஸா(ரலி)*
*ஆதாரம் : புகாரி*

2. நபி(ஸல்) கூறினார்கள்: ஒரு முஸ்லிம் தம் சகோதரரை உடல் நலம் விசாரித்தால், அவரிடமிருந்து அவர் திரும்பும் வரை “குர்பத்துல் ஜன்னா”வில் ஆகிடுவார். அல்லாஹ்வின் தூதரே “குர்பத்துல் ஜன்னா” என்றால் என்ன? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், அது சுவர்க்கத்தில் பறிக்கப்பட்ட கனிகள் ஆகும் எனக் கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : தவ்பான்(ரலி)*
*ஆதாரம் : முஸ்லிம்*

3. நபி(ஸல்) கூறினார்கள்: ஒரு முஸ்லிம் தம் சகோதரரை காலையில் உடல் நலம் விசாரித்தால், அன்று மாலை வரை அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் துஆச் செய்வார்கள். அவரை மாலையில் உடல் நலம் விசாரித்தால், மறுநாள் காலை வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக துஆச் செய்வார்கள்.

*அறிவிப்பாளர் : அலி(ரலி)*
*ஆதாரம் : திர்மிதி*

### நோயாளி தன் நோய் பற்றி மற்றவர்களிடம் கூறுவதில் தவறில்லை

நோயாளி தனக்கு ஏற்பட்டிருக்கும் நோய் பற்றி பிறரிடம் கூறுவதில் ஏதும் தவறில்லை. ஆனால் அல்லாஹ்வின் விதியை மறுக்கும் முகமாகவும் அந்த அல்லாஹ்வின் சோதனையை வெறுத்து பேசுவதும் தவறாகும்.

1. நபி(ஸல்) அவர்கள் காய்ச்சலாக இருந்தபொழுது நான் அவர்களிடம் சென்றேன். அப்பொழுது அவர்களைத் தொட்டுப் பார்த்தேன். பிறகு நான் தாங்கள் கடினமான காய்ச்சலால் கஷ்டப்படுகிறீர்கள் என்று கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “ஆம்” உங்களில் இரண்டு பேருக்கு ஏற்படும் காய்ச்சல் எனக்கு ஏற்படுகிறது எனக் கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி)*
*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்*

2. நான் கடினமாக நோய்வாய்ப்பட்டு இருந்த பொழுது நபி(ஸல்) அவர்கள் என்னிடம் வந்து என் உடல் நலத்தை விசாரித்தார்கள். அப்பொழுது (அல்லாஹ்வின் திருத்தூதரே) தாங்கள் பார்க்கும் கடினமான நோய் என்னை அடைந்துவிட்டது. நான் ஏராளமான செல்வங்களை உடையவன். எனக்கு என் மகளைத் தவிர வேறு எந்த வாரிசும் கிடையாது... இவ்வாறாக தொடர்ந்து மீதியுள்ள ஹதீஸையும் அறிவித்தார்கள்.

***அறிவிப்பாளர் : ஸஃது பின் அபீ வக்காஸ்(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

3. ஒரு முறை ஆயிஷா(ரலி) அவர்கள் (தங்கள் நோயின் கடுமையால்) வா ரஃஸா! (என் தலைக்கு வந்த கேடே!) எனக் கூறினார்கள். அப்பொழுது நபி(ஸல்) அவர்களும் பல் அன வா ரஃஸா! என் தலைக்கும் வந்த கேடே! எனக் கூறினார்கள்.

***அறிவிப்பாளர் : காசிம் பின் முஹம்மது ("அபூபக்ர்(ரலி)" அவர்களின் பேரன்)***

***ஆதாரம் : புகாரி***

## நோயாளிக்கு கூறும் மன ஆறுதல் வார்த்தை

ஒரு காட்டரபி நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது நபி(ஸல்) அவர்கள், அவரை உடல் நலம் விசாரிக்கச் சென்றிருந்தார்கள். அவர்கள் நோயாளியை உடல் நலம் விசாரிக்கச் சென்றால், **லாபஃஸ தஹூருன் இன்ஷா அல்லாஹ்** (பரவாயில்லை) "அல்லாஹ் நாடினால், குணமாகும்" எனக் கூறுவார்கள்.

***அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரலி)***

***ஆதாரம் : புகாரி***

## நோயாளிக்காக ஓத வேண்டிய துஆக்கள்

நோயாளியை சந்திக்கச் செல்பவர் அந்த நோயாளிக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறுவதுடன் நபி(ஸல்) அவர்கள் கற்றுத் தந்த துஆக்களையும் ஓதுவது சிறந்ததாகும். இந்த துஆக்களை குறிப்பிட்ட ஒருவர்தான் ஓத வேண்டுமென்றில்லை, யார் வேண்டுமாலும் ஓதலாம், நோயாளி தனக்குத் தானே ஓதி ஊதிக் கொள்ளலாம். அந்த துஆக்கள் பின் வருமாறு.

1. நபி(ஸல்) அவர்களிடம் யாராவதொருவர், தம் நோயைப் பற்றியோ, தம் புண்ணைப் பற்றியோ, காயத்தைப் பற்றியோ முறையிட்டால், அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தங்கள் நடுவிரலை பூமியில் வைத்து பின்னர் உயர்த்தி **"பிஸ்மில்லாஹ் துர்பத்தி அர்ளினா, பிரீகதி பஃளினா யுஷ்பா பிஹி ஸகீமுனா பிஇத்னீ ரப்பினா"**

**பொருள்:** அல்லாஹ்வின் திருப்பெயரால், (இது) எங்கள் பூமியின் மண், எங்களில் சிலரின் எச்சியுடன் கலந்துள்ளது. எங்கள் இரட்சகனின் கட்டளையால், இதனைக் கொண்டு எங்களின் நோயாளி குணமடைவார் என கூறுவார்கள்.

***அறிவிப்பாளர் : ஆயிஷா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

2. நபி(ஸல்) அவர்கள், தங்கள் குடும்பத்தினரில் சிலரின் உடல் நலத்தை விசாரிப்பார்கள். அப்பொழுது தங்கள் வலது கரத்தை அந்நோயாளியின் மீது தடவி. **அல்லாஹும்ம ரப்பன்னாஸ், அத்ஹிபில் பஃஸ இஷ்பி அன்தஷ் ஷாஃபீ லா ஷியா இல்லா ஷிபாவுக் ஷிபா அன் லாயுஹாதிரு ஸக்மா"** **பொருள்:** இறைவா! மக்களின் இரட்சகனே! கஷ்டத்தை போக்கி வைப்பாயாக! நோயைவிட்டு குணமளிப்பாயாக! நீயே குணமளிப்பவன். உன் குணமளித்தலைத் தவிர வேறு குணமளித்தல் கிடையாது. அது எந்த நோயையும் விட்டு வைக்காது என்று கூறுவார்கள்.

***அறிவிப்பாளர் : ஆயிஷா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

3. நான் நபித் தோழர் தாபித்(ரலி) என்பவரிடம் நபி(ஸல்) ஓதிப்பார்த்ததைக் கொண்டு நான் உமக்கு ஓதிப்பார்க்கட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கவர், "ஆம்" என்று கூறினார். அதன்படி **"அல்லாஹும்ம ரப்பன்னாஸ் முத்ஹிபில் பஃஸ் இஷ்பி அன்தஷ் ஷாஃபீ லா ஷாஃபிய இல்ல அந்த ஷிபாஅன் லாயுஹாதிரு ஸக்மா"**

**பொருள்:** இறைவா! மனிதர்களின் இரட்சகனே! குணமளிப்பாயாக! நீயே குணமளிப்பவன். உன்னைத் தவிர குணமளிப்பவர் வேறு யாரும் கிடையாது. உன் குணமளித்தல் எந்த நோயையும் விட்டு வைக்காது எனக் கூறி ஓதிப்பார்த்தார்கள். (புகாரி. முஸ்லிம் : அனஸ் - ரலி -)

4. நபி(ஸல்) அவர்கள் என்னை உடல் நலம் விசாரித்தார்கள். அப்பொழுது **""அல்லாஹும்மஷ்பி ஸஃதன் அல்லாஹும் மஷ்பிஸஃதன் அல்லாஹும்மஷ்பி ஸஃதன்"**

**பொருள்:** இறைவா! ஸஃதுக்கு குணமளிப்பாயாக! இறைவா! ஸஃதுக்கு குணமளிப்பாயாக! இறைவா! ஸஃதுக்கு குணமளிப்பாயாக! என மும்முறை துஆச் செய்தார்கள். (முஸ்லிம் : ஸஃது பின் அபீவகாஸ்(ரலி))

5. நான் ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் தம் உடலில் ஏற்படும் வலியைப் பற்றி முறையிட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உம் உடலில் வலிக்கின்ற இடத்தில் உம் கரத்தை வைப்பீராக! பிஸ்மில்லாஹ் என மூன்று முறை கூறுவீராக!" மேலும் **""அஊது பிஇஸ்ஸதில்லாஹி வகுத் ரதிஹி மின்ஷர்ரி மாஅஜிது வவுஹாதிரு"**

**பொருள்:** அல்லாஹ்வின் கண்ணியத்தையும் சக்தியையும் கொண்டு நான் அடையும் வேதனையின் தீங்கை விட்டும், நான் பயப்படும் விஷயங்களின் தீங்கை விட்டும் நான் பாதுகாவல் தேடுகிறேன் என்று ஏழு முறை கூறுவீராக!

***அறிவிப்பாளர் : அபூ அப்தில்லாஹ் உத்மான் பின் அபில் ஆஸ் (ரலி)***

***அதாரம் : முஸ்லிம்***

## முதல் வரிசை

பாங்கு சொல்வதிலும் தொழுகையின் முதல் வரிசையிலும் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களாயின் அதற்காகப் போட்டி போட்டுக் கொண்டு முந்தி வருவர். பின்னர் அதன் விளைவாக அவர்களிடையில் சீட்டுக் குலுக்கி எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவர். மேலும் தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களாயின் அதற்காக முந்திச் செல்வர். சுபுஹுத் தொழுகையிலும், இஷாத் தொழுகையிலும் உள்ள நன்மையை அறிவார்களானால் தவழ்ந்தாவது (ஜமாஅத்) தொழுகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

# அன்பில் திளைக்கச் செய்யுங்கள்

கதீஜா மணாளன்

ஷமீம், வயது 6, சென்னையில் ஒரு பிரபலமான பள்ளியில் படிக்கின்றான் பெற்றோர்கள் பணம் படைத்தவர்கள். ஷமீம் ஒல்லியான உருவம். பள்ளியில் யாருடனும் பேசுவதில்லை. எல்லா மாணவர்களும் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் போது ஷமீம் மட்டும் "உம்" என்று சோகத்தில் அமர்ந்திருப்பான். தினமும் மாணவர்கள் இவனை கேலி செய்ய கண்கணில் கண்ணீரோடு அழுத வண்ணம் வீடு திரும்புவான் ஷமீம். ஏன் "ஷமீம்" இப்படி? என்ற பெற்றோரின் கேள்விகளுக்கு விடையை சென்னையைச் சார்ந்த மனநல ஆலோசகர் "அனந்த வள்ளி சீனிவாசன்" இப்படிக் கூறுகிறார்.

ஷமீமின் இந்நிலைக்கு முழுக்க முழுக்கக் காரணம், பெற்றோர்கள்தான். தந்தை வியாபாரத்தில் படு பிஸியான ஆள். தாய் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியை, ஷமீமை கவனித்துக் கொள்வதெல்லாம் வேலைக்காரப் பெண் அஸ்மாதான். ஷமீமிடம் அன்பினைப் பொழிய, கொஞ்சிப் பேச, கண்டிக்க, கண்காணிக்க யாருமில்லாத ஏக்கம்தான். ஷமீமின் இந்த நிலைக்குக் காரணம். இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் "ஷமீம்" ஒரு கற்பனைப் பாத்திரம் அல்ல என்பதுதான். பெரும்பாலும் முஸ்லிம் குடும்பங்களில் இத்தகைய சூழல் குறைவுதான் என்றாலும், மாறிவரும் கலாச்சாரச் சூழல், பணம் தேடும் ஆசை போன்றவற்றால் நம் சமுதாயப் பெற்றோர்களும் எங்கோ தவறிழைக்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**சிறந்த இல்லம் நற்பண்புள்ள ஒரு தாயின் மடியைப் போன்றதாகும். அதில்தான் பிள்ளைகள் வளரத் துவங்குகின்றார்கள். அதுதான் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதன் முதல் கட்டமாகும் பெற்றோர்களின் அன்பினாலும், பாசத்தினாலும் குழந்தைகளின் தனிமை தகர்க்கப்பட்டு அவர்களது ஆசைகளும், ஆர்வங்களும், குறைகளும் குற்றச்சாட்டுகளும் வெளிக்கொணரச் செய்து அப்பிஞ்சு இதயங்களை பண்படுத்துவதில் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாகும்.**

ஒரு முஸ்லிம் தன்னுடைய குழந்தைகளுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நபி(ஸல்) அவர்களின் அழகிய முன்னுதாரணத்தைப் பாருங்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் பேரக் குழந்தை ஹஸன்(ரலி) அவர்களை முத்தமிட்டார்கள். அப்போது அ்.ர்.் இப்னு ஹாபிஸ்(ரலி) அவர்கள் எனக்கு பத்து குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்களில் ஒருவரையும் நான் முத்தமிட்டதில்லை என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள் "கருணை காட்டாதவன், கருணை காட்டப்பட மாட்டான். எனப் பகர்ந்தார்கள்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)*

*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்*

அன்பின் வெளிப்பாடுதான் முத்தமிடுதல் என்பது. நம்மில் எத்தனை பேர் நம் குழந்தைகளை தினமும் முத்தமிடுகிறோம். கைக் குழந்தையாக இருக்கும் போது கொஞ்சி மகிழ்ந்தவர்கள், அந்த மழலையர்கள் பேசும் பருவத்தில் அவர்களுடன் கொஞ்சிப் பேசுவதால் தன் கௌரவத்திற்கு பெரும் இழுக்கு என்று நினைத்து விடுகின்றனர்.

இதே போன்று நபி(ஸல்) அவர்கள் தன் பேரக் குழந்தைகளுடன் விளையாடி மகிழ்ந்த இன்னொரு சம்பவத்தைப் பாருங்கள். நபி(ஸல்) அவர்கள் ஹஸன்(ரலி) அல்லது ஹுஸைன்(ரலி) அவர்களின் கரங்களைப் பிடித்து அவர்களின் பாதங்களை தன் பாதங்களின் மீது வைத்து பிறகு நீ மேலே ஏறு என்று கூறினார்கள்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி),*

*ஆதாரம் : அல்-அதபுல் மு.்ப்தத், மு.்ஜம் அத் தப்ராணி*

நபி(ஸல்) அவர்கள் அப்பாஸ்(ரலி) அவர்களின் பிள்ளைகளான, அப்துல்லாஹ்(ரலி), உபைதுல்லாஹ்(ரலி), குஸைய்யில்(ரலி) ஆகிய மூவரையும் அணிவகுத்து நிற்கச் செய்து "எவர் என்னிடம் முதலில் ஓடி வந்து தொடுகின்றாரோ அவருக்கு நான் இன்னென்ன தருவேன்" என்று கூறுவார்கள். சிறுவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் ஓடோடி வந்து அவர்களின் முதுகிலும், நெஞ்சிலும் விழுவார்கள். நபி(ஸல்) அவர்கள் அச்சிறுவர்களை முத்தமிடுவார்கள்.

*ஆதாரம் : முஸ்னத் அஹ்மது,*

போதனையாளரான நபி(ஸல்) அவர்கள் குழந்தைகளிடம் தோழமை கொண்டு, விளையாடி மகிழ்ந்து, முத்தமிட்டு பாசத்தை பொழிவதிலும், நேசத்துடன் நடந்து கொள்வதிலும் நமக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள்.

ஷமீம் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், பெற்றோர்கள் இருவருமே வேலையில், ஷமீமுடன் அன்புகாட்ட, விளையாட யாருமில்லை. தனிமையில் வாடியதால், ஷமீம் மனநிலையில் சிறிய பாதிப்பு, இதுதான் ஷமீமை இப்படி மாற்றிவிட்டது. இப்படி கலந்துரையாடாமல், அன்பினை வெளிப்படையாய் காட்டாமல் இருக்கும் பெற்றோர்களால் சிறு குழந்தைகளுக்கு இருதயம் கூட பாதிக்கப்படும் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

"குழந்தைகளின் உடல் நலம் மற்றும் மனோநலம் போன்றவற்றில் பெற்றோர்களின் பங்கு மிக முக்கியம். வேலைக்குச் செல்லும் பெற்றோர்களால் இத்தகைய அன்பு, பாசம் எல்லாம் குழந்தைகளுக்கு கிடைக்காத ஒன்றாகவே ஆகிவிடுகிறது. பாசம் மற்றும் அன்பு காட்டப்படாத குழந்தைகள் பிற்காலத்தில் இருதய பாதிப்பிற்க்குள்ளாகலாம்" (நன்றி : தினகரன்)

ஆகவே சிறந்த இல்லம் நற்பண்புள்ள ஒரு தாயின் மடியைப் போன்றதாகும். அதில்தான் பிள்ளைகள் வளரத் துவங்குகின்றார்கள். அதுதான் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதின் முதல் கட்டமாகும். பெற்றோர்களின் அன்பினாலும், பாசத்தினாலும் குழந்தைகளின் தனிமை தகர்க்கப்பட்டு அவர்களது ஆசைகளும், ஆர்வங்களும், குறைகளும், குற்றச்சாட்டுகளும் வெளிக்கொணரச் செய்து அப்பிஞ்சு இதயங்களை பண்படுத்துவதில் பெற்றோரின் பங்கு இன்றியமையாததாகும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல் உடல், அறிவு, ஆன்மா ஆகிய அனைத்தும் பூரணத்துவம் பெற்ற குழந்தைகளாக திகழச் செய்வது பெற்றோர்களின் கடமையும், பண்புமாகும் என்பதை உணர்ந்து செயல்படுவோமாக.

# தமிழ்நாடு.! சில அரிய தகவல்கள்!!

– கோவை. பஷீர்

❖ சென்னையை அடுத்து அனைத்து துறைகளிலும் முன்னணியில் இருக்கும் நகரம் கோவை. 3 பல்கலைக்கழகங்கள், 13 பொறியியல் கல்லூரிகள், 31 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 2 மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட கல்வி நகரம்.

❖ கோவை – செல்லமாக "கொங்கு நகரம்" சீதோஷ்ண நிலை மற்றும் வியாபார நிமித்தமாக "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்"

❖ ஏற்றுமதி நகைகள் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடம் கோவைதான் வகிக்கிறது.

❖ இந்தியாவின் முதல் மோட்டார் பம்ப் மற்றும் கிரைண்டர் உருவான இடம் கோவைதான்.

❖ அமெரிக்க வாழ் இந்தியர்களின் விருப்பமான கிரைண்டர் கோவை கிரைண்டர்தான். இந்தியாவிலேயே வருடத்திற்கு 6 லட்சம் கிரைண்டர்கள் 180 கோடி ரூபாய் மதிப்பில் தயாரித்து முன்னணியில் இருக்கும் நகரம்.

❖ நிறைய பஞ்சாலைகள், நூற்பாலைகள், மின்சாரப்பொருட்கள், ஃபவுண்டரிகள், எந்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கொண்ட நகரம்.

❖ Business Process Out dooring (வெளித்திறன் பெறுதல்) மென்பொருள் தயாரிப்பு மற்றும் கம்ப்யூட்டர்கள் சம்பந்தமான தொழில் முன்னணியில் இருப்பதால் சென்னைக்கு அடுத்து 2ஆவது "டைடல் பார்க்" கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ ஸ்டீல் பர்னிச்சர் தொழிலில் மட்டும் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் நடைபெறும் இடம் கோவை.

❖ கோவை தொழில் அதிபர்கள் பட்டியலில் இன்றைக்கும் முதல் இடத்தில் இருப்பவர் மறைந்த G.D நாயுடுதான். விஞ்ஞானி என்று அறியப்பட்டவர். அவரது கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை 80க்கும் மேல் ஆகும்.

❖ கோவையில் உள்ள Roots Industries Ltd. கம்பெனி வாகனங்களுக்கான ஹாரன்களை (Horn) தயாரித்து ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் Ford கார் கம்பெனிக்கு சப்ளை செய்கின்றது.

❖ இந்தியாவின் பங்கு விவரங்கள், இந்தியப் பொருளாதாரம், நிறுவனத்தில் முதலீடு செய்வதில் அறிவுரை வழங்குவது போன்றவற்றில் சிறந்து விளங்கும் "மோதிலால் ஓவர்ஸ் செக்யூரிட்டிஸ் லிமிடெட்" நிறுவனம் கோவையில் "குவாலிட்டி ஷேர்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற பெயரில் கிளை அலுவலகத்தை துவக்கியுள்ளது.

❖ மதுரை - தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரம் சென்னைக்கு அடுத்து இரண்டாவதாக மாநகராட்சி ஆன நகரம், தொழில் ரீதியாக மிக விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கும் நகரம்.

❖ மதுரை, மேலூர் வட்டத்தில் நவரத்தினக் கற்கள் மற்றும் விமான கட்டுமானத்திற்கு பயன்படும் மாலிப்படினம் (Molybdenum) என்ற பொருளும் கிடைப்பது அருட்கொடை.

❖ மதுரை சுங்குடி சேலைகள் உலகப்புகழ் பெற்றது.

❖ ஆண்டுக்கு 700 கோடி மதிப்பிற்கு ரப்பர் பொருட்கள் மதுரையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

❖ உடல் ஊனமுற்றவர்களை (Physically – visually) "மாற்றுத்திறன் படைத்தவர்கள் என்று குறிப்பிடுவது தற்போது மரியாதையான செயல். இப்படி மாற்றுத்திறன் படைத்தவர்கள் நிறைய பேரை வேலைக்கு அமர்த்தி புரட்சி செய்த பெருமை ஈரோடு சக்தி மசாலாவிற்கு உண்டு.

❖ வீல் சேர், தாங்கு கட்டைகள் போன்றவற்றை தயாரிக்கும் தென்காசிக்கு அருகில் உள்ள ஆய்குடியில் இருக்கும் அமர் சேவா சங்கத்தை நடத்துவது ஒரு மாற்றுத்திறன் படைத்தவர்தான்.

❖ திருச்சியில் இருக்கும் பாரதிதாசன் Institute of management தமிழகத்தின் முன்னணி மேலாண் பயிற்சி மையமாக (MBA) தேர்வு செய்யப்பட்டு A+ level 1 என்ற Grade-ஐ பெற்றிருக்கிறது.

❖ தமிழ்நாட்டில் அந்நிய செலாவணி அதிகமாக ஈட்டும் தொழில் பட்டியலில் திருப்பூர் நகரம் முதலிடத்தில் உள்ளது. திருப்பூரில் தயாராகும் பின்னலாடைக்கு (Knit Garments) உலக அளவில் மார்கெட் உள்ளது.

❖ கடந்த ஆண்டு வாஷிங்டன் சிட்டிலில் நடைபெற்ற அகில உலக நிறுவனங்களிடையேயான தொழில் முனைவுப் போட்டியில் பாரதிதாசன் இன்ஸ்ட்யூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளார்கள்.

❖ முத்து நகர் எனப்படும் தூத்துக்குடி நகரம் தமிழகத்தின் முக்கிய வணிக நகரம் ஆகும்.

❖ தற்போது 2 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்டு வரும் சேது சமுத்திரத்திட்டம் மூலம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் இலங்கையை சுற்றி வர அவசியமில்லை. இதனால் 48 மணிநேரம் மற்றும் 436 மைல்கள் தூரம் தவிர்க்கப்படும்.

இந்தக் கால்வாயின் கட்டுமானப்பணி முடிந்துவிட்டால் இந்தியாவின் மிகப்பெரிய Trans-shipment துறைமுகம் தூத்துக்குடி துறைமுகமாகத்தான் இருக்கும்.

❖ வெண்மைப் புரட்சி வெற்றி தொழில் அதிபர் (ஆரோக்கியா பால்) மற்றும் அருண் ஐஸ்கிரீம் சு. பு. சந்திரமோகன் மிகவும் சிறிய முதலீட்டில் தொடங்கிய அருண் ஐஸ்கிரீம் இன்று 500 கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் நிறுவனமாக உள்ளது. (Huclson agrd food)

❖ அருண் ஐஸ்கிரீம் வளர்ச்சி அகமதாபாத்தில் உள்ள Indian Institute of management கல்வி நிறுவனத்தின் MBA மாணவர்களும் Case Study-ல் இடம் பெற்றுள்ளது.

❖ இந்தியாவிலேயே கல்வி நிறுவனங்களுக்காக முதல் முறையாக ISO 9002 சான்றிதழ் பெற்ற பெருமை வேலூர் தொழில் நுட்ப நிகர்நிலை பல்கலைக்கழகத்தைச் சாரும். (Vellore Eng. Institute Of Deemed University)

❖ வெகு சீக்கிரத்தில் இந்தியாவிலேயே கவர்ச்சியான முன் மாதிரி மாநிலமாக தமிழகம் ஆகப் போகின்றது என்பதற்கு இதைவிட வேறுசான்றுகள் அவசியமில்லை.

பல வெளிநாட்டு கம்பெனிகள் இந்தியாவில் அவர்களது வர்த்தகத்தை ஆரம்பிக்க நினைத்தால் அவர்களின் தேர்வு தமிழகம்தான். காரணம் தமிழகத்தில் தரை, வான் மற்றும்

கடல் போக்குவரத்து சிறப்பாக உள்ளது. தொழில் மைய நாடான சிங்கப்பூருக்கு அருகில் இருப்பது. கல்வியறிவுள்ள பணியாளர்கள், பொறியியல் வல்லுனர்கள் அதிகமாக இருப்பது. யூனியன் பிரச்சினைகள் அதிகமாகக் கிடையாது. விலைவாசி குறைவு மற்றும் தொழில் நுட்ப கல்விக்கூடங்கள் அதிகம். இப்படிப்பட்ட காரணங்களால் தமிழகத்தில் அமைந்து கொண்டிருக்கும் மற்றும் அமையப் போகும் சில தொழில் வர்த்தகங்கள் பின் வருமாறு:

❖ = பெரும்புதூரில் செயிண்ட் கோபெய்ன் தன்னார்வத் தொழிற்சாலை - முதலீடு 800 கோடி மற்றும் நோக்கியா செல்போன் உற்பத்திசாலை - முதலீடு ரூ 625 கோடி.

❖ சென்னையில் ஹுண்டாய் (Hyundai) மோட்டார் விரிவாக்கத் திட்டம் ரூ 1700 கோடி.

❖ கடலூரில் நாகர்ஜுனா ஆயில் சுத்திகரிப்பு ஆலை முதலீடு ரூ 3480 கோடி

❖ கோயம்புத்தூரில் கொங்கன் ரயில்வேயிஸ் ஸ்கை பஸ் திட்டம் - முதலீடு ரூ 1270 கோடி ரூபாய்.

❖ நங்கனேரியில் "அட்வான்ஸ்டு டெக்னாலஜியின்" வன்பொருள் (Hardware) உற்பத்திசாலை - முதலீடு ரூ 3000 கோடி

❖ தூத்துக்குடியில் "டாட்டா ஸ்டீல்ஸ்ன்" டைட்டானியம் டையாக்ஸைடு ஆலை - முதலீடு ரூ 1800 கோடி

❖ கடைசி தகவல் - எச்சரிக்கையான தகவல் - வேதனையான தகவல்

பொருளாதாரம், டெக்னாலஜி, அதிக வேலைவாய்ப்பு, உலகத்தரத்திற்கு இணையான கல்வி, சாதிக்கத்தக்க துடிப்பான இளைஞர்கள் என்று இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாகிய தமிழகம் தற்போது, "எய்ட்ஸ்" என்ற கோரப்பிடியில் சிக்கித் தத்தளிக்கிறது.

இந்தியாவிலேயே எய்ட்ஸ் (HIV+) வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் இருப்பது தமிழகம் ஆகும். இந்தியத் திருநாட்டின் மொத்த எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் 45% தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்

தகாத உறவின் தொடர்பு நோய்கள்தான் மிக விரைவில் எய்ட்ஸ் பரவ உதவி செய்கின்றது என்பது பலதரப்பட்ட ஆராய்ச்சிகளுக்குப்பின் கிடைக்கப்பெற்ற முடிவு. எய்ட்ஸ் பற்றிய உண்மையை அதாவது பரவும் முறையை ஒவ்வொருவரும் அறிவதோடு மட்டுமல்லாமல் தனிமனித ஒழுக்கத்துடன் இருப்பது அதைவிட சாலச் சிறந்தது.

★ ★ ★

# அஸர் தொழுகையின் சிறப்பு!

இரவு நேரத்து வானவர்களும் பகல் நேரத்து வானவர்களும் உங்களிடம் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருப்பார்கள். ஃபஜ்ர் தொழுகையிலும் அஸர் தொழுகையிலும் இருசாராரும் சந்திக்கின்றனர். பின்னர் உங்களுடன் இரவு தங்கியவர்கள் மேலேறிச் செல்கின்றனர். என் அடியார்களை எந்த நிலையில் விட்டு வந்தீர்கள்? என்று அவர்களிடம் இறைவன் இதுபற்றி தெரிந்து கொண்டே விசாரிப்பான். அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போதே அவர்களை விட்டு விட்டு வருகின்றோம், என்று அவர்கள் விடையளிப்பார்கள்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

ஒரு பௌர்ணமி அன்று நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்கள் நிலவை நோக்கி இந்த நிலவை நீங்கள் நெருக்கடியின்றி காண்பது போல நிச்சயம் உங்கள் இறைவனை நீங்கள் காண்பீர்கள்! சூரியன் உதிக்கும் முன்னரும், சூரியன் மறையும் முன்னரும் தொழும் விஷயத்தில் (தூக்கம் போன்றவற்றால்) நீங்கள் மிகைக்கப்படாதிருக்க இயலுமானால் அதைச் செய்யுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு ஜரீர்(ரலி) அவர்கள் அறிவித்து விட்டு, சூரியன் உதிக்கும் முன்னரும் மறையுமுன்னரும் உமது இறைவனின் புகழைத் துதிப்பீராக! (அல்குர்ஆன் 50:39) என்ற வசனத்தையும் ஓதிக் காண்பித்தார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

பகலின் வெப்பம் குறைந்த இரு தொழுகைகளை (ஃபஜர், அஸர்) யார் தொழுகிறாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பாளர் : மூஸா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.***

யார் அஸர் தொழுகையை விட்டு விடுகிறாரோ நிச்சயமாக அவரது அமல்கள் அழிந்து விடுகின்றன என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.***

★ ★ ★

# உங்களுக்குத் தெரியுமா?

1. "AH" என்பதன் விரிவாக்கம் என்ன?
2. நியூட்ரானைக் கண்டறிந்தவர் யார்?
3. ஊழல் செய்வதில் உலகில் 3ஆவது இடம் வகிக்கும் ஆசிய நாடு.
4. கலீஃபா உமர்(ரலி) அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள் யாவை?
5. தான் வழி நடத்திச் சென்ற அனைத்து போர்களிலும் வெற்றி ஈட்டிய நபித்தோழர் யார்?
6. அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சின்னம் எது?
7. முதன் முதலில் விண்வெளிப் பயணம் செய்த நபி யார்?
8. குதிரைச் சக்தி (Horse Power) எத்தனை வாட்சுக்குச் சமம்.
9. முதன் முதலில் இறை ஆலயம் எங்கு எழுப்பப்பட்டது?
10. தன் பதவியை ராஜினாமா செய்த ஒரே அமெரிக்க ஜனாதிபதி யார்? ***(விடைகள் : 9-ம் பக்கம்)***

# ஆதாமின் மகனே!

ஸாலிஹ் குலசை

தீர்மானிக்க வேண்டியதும் தேர்ந்தெடுக்க வேண்டியதும் நீ மட்டுமே.

நான் அல்லது நீ, அவன் அல்லது அவள், தனிப்பட்ட ஒரு ஆள் அல்லது ஒரு சமூகம், நாம் நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடத்திலும் ஒன்று சாப்பிடுவதற்கான முயற்சியில் இருப்போம், அல்லது சுகமான தூக்கத்திற்காக மெத்தையில் படுத்திருப்போம், அல்லது ஆரோக்கியத்தை கட்டிக்காப்பதற்காக உடற்பயிற்சியில் மூழ்கியிருப்போம், அல்லது உடலையும் மனதையும் சுத்தமாக்க குடும்பத்தோடு கடற்கரையில் குலாவியிருப்போம், அல்லது பைத்தியக்கார இசையில் லெகித்து இருப்போம், அல்லது திரையில் வரும் ஆபாச படங்களைப் பார்த்து மகிழ்ந்து இருப்போம் அல்லது விலக்கப்பட்ட ஹராமான காரியங்களை செய்து கொண்டிருப்போம்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:

**இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.**

***(அல்-குர்ஆன் 3:185)***

திடமாக இவ்வுலக வாழ்க்கை வீண் விளையாட்டாகவும் வேடிக்கையாகவுமிருக்கிறது ஆனால், நீங்கள் ஈமான் கொண்டு பயபக்தியுடையவர்களாக இருந்தால், அவன் உங்களுடைய கூலியை உங்களுக்கு அளிப்பான்.

***(அல்-குர்ஆன் 47: 36)***

ஒருவேளை இதற்கெல்லாம் வித்தியாசமாக!

தொழவோ, குர்ஆன் ஓதவோ செய்யலாம், அல்லது அல்லாஹ்வை துதிக்கவோ, திக்ரோ செய்யலாம் இந்த விஷயங்களையோ இதுபோன்ற விஷயங்களையோ நம்முடைய சுய விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க முடியும் நீ வேலைக்குப் போகவும், வேலைக்குப் போகாதிருக்கவும், சாப்பிடவும், சாப்பிடாதிருக்கவும், தொழவும், தொழாதிருக்கவும் நம்மால் முடியும் இவையனைத்தும் நீ மட்டும் செய்ய வேண்டிய காரியங்கள் தீர்மானிக்க வேண்டியதும் தேர்ந்தெடுக்க வேண்டியதும் நீ மட்டுமே என்றால் நீ இந்த நிமிடம் வரை அறிமுகப்படாத ஒரு காரியம் உண்டு, உன்னுடைய சொந்த முயற்சியில் தேர்ந்தெடுக்க முடியாத காரியம். உனக்கு இஷ்டம் இல்லை என்றாலும் நிர்பந்தமாக நீ எதிர்பார்க்க வேண்டிய ஒரு காரியம் இன்றோ அல்லது நாளையோ! - ஆம் அது தான் உன் மரணம்

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:

**ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது.**

***(அல்-குர்ஆன் 21: 35)***

**ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகிக்கக் கூடியதேயாகும் பின்னர் நீங்கள் நம்மிடமே மீள்விக்கப்படுவீர்கள்.**

***(அல்-குர்ஆன் 29: 57)***

அதை தொடர்ந்து நிர்பந்தமாக உன்னுடைய புதிய வீட்டிற்கு, புதியதொரு வாழ்க்கைக்கு புறப்படவேண்டியுள்ளது. உன்னுடைய அந்த வீடு ஒடுங்கியது மட்டுமல்ல காரிருள் நிறைந்ததுமாகும், பாரம்கூடிய கல்லும், மண்ணும் மட்டுமே உன் மேல் மூடப்பட்டிருக்கும். சூட்டிலிருந்து உன்னை பாதுகாக்க ஏ.சி.யோ அல்லது குளிரிலிருந்து பாதுகாக்க சூடோ அங்கு இல்லை. உன்மேல் மூடப்பட்டிருக்கும் (க.்.பன்) உடையை அகற்றி நீ உடற்பயிற்சி செய்து ஆரோக்கியத்தை கட்டிக்காத்த உன் உடம்பை தின்பதற்கு சண்டையிடும் புழுக்கள் தான் உன்னைச் சுற்றிலும், ஆனால் இதை ஒன்றும் அறியாதவனாய் நீ, நீ மட்டுமே இருப்பாய்.

## எப்படிப்பட்டது அந்த புதிய இடமும், வாழ்க்கையும்

உன்னுடைய வாழ்க்கையை நீ பதிவு செய்தது நல்லவர்களின் கூட்டத்திலா? அல்லது கெட்டவர்களின் கூட்டத்திலா? எல்லாம் முடிந்து போன உன் வாழ்க்கையில் நீ உயிருடன் பூமியில் வாழும்பொழுது தேர்ந்தெடுத்தது போலிருக்கும் உன்னுடைய புதிய வாழ்க்கை. நீ உலக ஆசாபாசங்களில் மூழ்கி உன்னைப் படைத்த இறைவன் யாரென்றே தெரியாமல் அதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் அல்லாஹ்விற்கு இணைவைத்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் தான்தோன்றித்தனமான வாழ்க்கையை தேர்ந்தெடுத்திருப்பாய் என்றால் கஷ்டமும், நஷ்டமும் நிறைந்ததாகும் அவ்வாழ்க்கை.

இந்த வாழ்க்கையை குறிக்கும் விதமாக அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்

**(இவ்வுலக)சுகானுபவங்களில் மூழ்கிக் கிடப்போரை நாம் வேதனையைக் கொண்டு பிடிக்கும்போது, உதவிக்காக அவர்கள் அபயக் குரல் எழுப்புவார்கள்.**

**இன்று நீங்கள் உதவிக்காக அபயக் குரலை எழுப்பாதீர்கள் நிச்சயமாக, நீங்கள் நம்மிடமிருந்து உதவி செய்யப்பட மாட்டீர்கள்.**

**என்னுடைய வசனங்கள் நிச்சயமாக உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டன ஆனால் நீங்கள் புறங்காட்டிச் சென்று கொண்டிருந்தீர்கள்.**

**ஆணவங் கொண்டவர்களாக இரவுக் காலத்தில் கூடி குர்ஆனை பற்றி கட்டுக்கதைகள் போல் வீண் வார்த்தையாடியவர்களாக (அதைப்புறக்கணித்தீர்கள் என்று அவர்களிடம் கூறப்படும்).**

***(அல்-குர்ஆன் 23: 64-67)***

அல்லது அல்லாஹ்விற்கு பயந்தவனாக நபி(ஸல்)அவர்களின் மூலம் கற்றுத்தந்த முறைப்படி உன் வாழ்வை அமைத்திருந்தாய் என்றால் மரணத்திற்கு பிறகு உள்ள உன் வாழ்க்கை கஷ்டமில்லாத நரக நெருப்பின் வேதனையை அனுபவிக்காத கப்ரின் வேதனை இல்லாத சொர்க்கத்தில் சிறந்த வாழ்வாக அமையும்.

இந்த வாழ்க்கையை குறிக்கும் விதமாக அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்

**ஈமான் கொண்டு யார் (ஸாலிஹான) நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளிலே புகுத்துவான் அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டேயிருக்கும் அங்கே பொன்னாலான கடகங்களிலிருந்தும், முத்திலிருந்தும் ஆபரணங்கள் அணிவிக்கப்படுவார்கள் அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டாக இருக்கும்.**

***(அல்-குர்ஆன் 22: 23)***

**(ஆனால்) நம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்வோருக்கு நன்மாராயங்கள் கூறுவீராக! சதா ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகளைக் கொண்ட சுவனச் சோலைகள் அவர்களுக்காக உண்டு, அவர்களுக்கு உண்ண அங்கிருந்து ஏதாவது கனி கொடுக்கப்படும்போதெல்லாம் "இதுவே முன்னரும் நமக்கு (உலகில்) கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவார்கள்" ஆனால் (தோற்றத்தில்) இது போன்றதுதான் (அவர்களுக்கு உலகத்தில்) கொடுக்கப்பட்டிருந்தன, இன்னும் அவர்களுக்கு அங்கு தூய துணைவியரும் உண்டு, மேலும் அவர்கள் அங்கே நிரந்தரமாக வாழ்வார்கள்.**

***(அல்-குர்ஆன் 2: 25)***

ஆனால்

இந்த நிமிடம் வரை உன் வாழ்க்கையை பின்னால் திரும்பிப் பார்த்து உன்னை நீயே சுயவிசாரணை செய்துகொள்ள சிறிய அவகாசம் உன் முன் உள்ளது. இன்றோ நாளையோ உன்னை அனுப்பி வைத்து விடகூடும். அதற்காக ஒரு சமூகம் தயாராக உள்ளது. அதற்கு முன் இச்சந்தர்ப்பத்தை புத்தியோடு உபயோகப்படுத்த வேண்டும். பூமியில் உள்ள எந்த சொத்தோ, சொந்த-பந்தமோ, உற்றார்-உறவினர்களோ, நண்பர்களோ, மனைவி-மக்களோ யாருமே உதவிக்கு வரமுடியாத அந்த நாளில் உனக்கு நீயும் உன் நற்கருமங்கள் மட்டுமே உதவி. அந்த நேரம் வருவதற்கு முன்னால் உலகையே படைத்து காக்கும் ஒரே இறைவனின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து செய்த பாவங்களை நினைத்து வருந்தி பாவ மன்னிப்பு கேள் பாவங்களை மன்னிக்க அல்லாஹ் போதுமானவன்.

**"ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகிக்கக் கூடியதேயாகும் பின்னர் நீங்கள் நம்மிடமே மீள்விக்கப்படுவீர்கள்"** ***(அல்-குர்ஆன் 29: 57)***

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்

எவர்கள் அறியாமையினால் தீமை செய்துவிட்டு, பின்னர் விரைவில் மன்னிப்புத் தேடி கொள்கிறார்களோ அவர்களுக்குத்தான் அல்லாஹ்விடத்தில் மன்னிப்பு உண்டு. அல்லாஹ் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். இன்னும் அல்லாஹ் நன்கறிந்தோனும் ஞானம் உடையோனுமாக இருக்கின்றான். **(அல்-குர்ஆன் 4: 17)**

**உங்களுக்குத் தெரியுமா?**

## விடைகள்

1. **ANNO HIJRI**
2. **சாட் விக் (Chat Wick)**
3. **இந்தியா**
4. **கெய்ரோ, பாக்தாத், பஸ்ரா, கூபா**
5. **காலித் இப்னு வலீத்(ரலி)**
6. **கழுதை**
7. **சுலைமான்(அலை)**
8. **746**
9. **மக்கா நகரில் (திருக்குர்ஆன் 2:127)**
10. **நிக்ஸன்**

## எத்தனை எதார்த்த வாழ்க்கை (மண்ணறை)

நீ அதில் வெற்றி பெற்றால் உனக்கு என்றென்றும் வெற்றிதான். அதில் நீ தோற்றுவிட்டால் என்றென்றும் தோல்விதான்.

அவன் நல்லடியானாக பூமியில் வாழ்ந்திருந்தால்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்

...அப்போது அவரிடத்தில் (முன்கர், நகீர்) என்ற இரண்டு மலக்குகள் வந்து அவரை எழுந்திருக்கச் செய்து அமர வைப்பார்கள். அவர்கள் அந்த அடியாரை நோக்கி பின்வருமாறு கேள்விகள் கேட்பார்கள்.

கே: உனது இறைவன் யார்?

ப: எனது இறைவன் அல்லாஹ்

கே: உனது மார்க்கம் என்ன?

ப: எனது மார்க்கம் இஸ்லாம்

கே: உன்னிடத்தில் (மார்க்கத்தை போதிக்க) அனுப்பப்பட்டவர் யார்?

ப: அவர் அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள்

கே: நீ அதனை எவ்வாறு அறிந்து கொண்டாய்?

ப: அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதினேன், அதனை விசுவாசம் கொண்டேன்,

அதனை உண்மைப்படுத்தினேன். எனது அடியான் உண்மையுரைத்துவிட்டான் அவனுக்காக சொர்க்கத்தின் விரிப்புகளை விரித்துவிடுங்கள். சொர்க்கத்தின் ஒரு கதவை அவனுக்காக திறந்து விடுங்கள் என்று கூறக்கூடிய ஓசையொன்று அப்பொழுது வானத்திலிருந்து வரும். அவனுடைய கண் பார்வை எட்டுமளவுக்கு அவனது கப்ர் விசாலமாக்கப்படும், அப்பொழுது நறுமணம் கமழக்கூடிய அழகிய ஆடை அணிந்து வசீகரமான தோற்றத்துடன் ஒரு மனிதர் அவனிடத்தில் வருவார். அம்மனிதர் அவரை நோக்கி உனக்கு வாக்களிக்கப்பட்ட உன்னை மகிழ்வூட்டக்கூடிய ஒரு நன்னாள் இதுவாகும் என்று கூறுவார்.

அந்த மூ.்.மின் அம்மனிதரை நோக்கி நீ யார்? என்று கேட்பார், அப்பொழுது அம்மனிதர் நான் தான் (நீ உலகில் தேடி வைத்த) உனது ஸாலிஹான அமல்கள் (அல்லாஹ் தான் இந்த உருவில் உன்னிடம் என்னை அனுப்பியுள்ளான்) என்று கூறுவார் அப்பொழுது அந்த மூ.்.மின்

அல்லாஹ்வே! எனது குடும்பத்துடனும் நான் தேடி வைத்திருந்த எனது அமல்களுடனும் சென்றடைய மறுமையை உண்டாக்குவாயாக!. என்று கேட்பார். மரண வேலையிலிருந்து கப்ர் வரை ஒரு மூ.்.மினுடைய நிலை இவ்வாறு இருக்கும்.

***தொடரும் (இன்ஷாஅல்லாஹ்)***

# கொரில்லா (Gorilla)

*-அறிவியல் தொடர்-* **E. உஸ்மான் அலி**

குடும்பத்தைக் கட்டிக் கொண்டு மார் அடிக்கும் பொழப்பாய் போச்சே என்ற சலித்துக் கொண்டு மாரடிக்கக் கூடியவை கொரில்லாக்கள் அல்ல! இவை மார்பில் அடித்துக் கொள்வதன் அர்த்தம், எதிரியை நேருக்கு நேர் அழைத்து அவற்றிற்கு பீதியை கொடுக்கும் மார் தட்டலாகும். மேலும் இவற்றின் பயத்தை உண்டாக்கும் கர்ஜனையும் அவை தங்கள் மார்பை அடித்துத் கொள்ளும் முறையும், வீரிட்டு கத்துவதன் மூலமும் இறுதியாக இவற்றின் வெளிப்பாடு மிகைத்து விடும்போது நிசப்தமான காடே அல்லோகலப் பட்டுவிடும் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அதை சகித்து கொள்ள முடியாமலோ அல்லது பயந்தோ அவற்றை நெருங்கக் கூடிய எதிரி ஆழம் தெரியாமல் காலை விட்ட கதையாக புறமுதுகிட்டு பீதியினால் ஓட்டம் பிடிக்கின்றது. இருப்பினும் இவற்றை சுற்றுலா பயணிகள் எந்த விதமான இடையூரும் இன்றி அன்புடன் உணவு பொருட்களுடன் நெருங்கும் போது அவை அவற்றை மிக அன்புடன் ஏற்றுக் கொள்கின்றன.

கொரில்லாக்கள் தங்களுக்கிடையே 15 வகையான வித்தியாசமான ஒலியை எழுப்புவதன் மூலம் மற்றவற்றுடன் தகவல் பரிவர்த்தனையில் ஈடுபடுகின்றன. விலங்குகள் தங்களுக்குள் ஏதோ விதத்தில் பேசி மற்றவற்றிற்கு தகவல்களை தெரிவிக்கின்றன என்பது அறிவியல் ரீதியாக நிரூபனம் செய்யப்பட்டுள்ளது. இவையும் வித்தியாசமான ஒலியை எழுப்புவதன் மூலம் தகவல் பரிமாற்றம் செய்துக் கொள்கின்றன. கொரில்லாக்கள் சைகை மொழியை மிக விரைவில் அறிந்துக் கொள்ளும் திறன் பெற்று விளங்குகின்றன. கோகோ (koko) என்ற கொரில்லாவிற்கு நன்கு பயிற்சி அளித்ததன் மூலம் 500க்கு மேற்பட்ட சைகைகளை புரிந்துக் கொள்ளும் திறன் இருப்பதாக அறிய வந்துள்ளது. சில கொரில்லாக்களுக்கு முன்பாக கண்ணாடியை வைத்து சோதித்த போது பிரதிபலிப்பது தங்கள் உருவம்தான் என்பதை தெரிந்துக் கொள்ளுகின்றன. இதன் மூலம் இவற்றிற்கு சுயமாக சிந்திக்கும் திறன் சிறிது இருப்பது விளங்கிக் கொள்ள முடிந்தது.



மனிதர்களைப் போன்றே இவற்றிற்கும் இனப்பெருக்கத்திற்கென்று குறிப்பிட்ட ஒரு கால வரையரை கிடையாது. வருடத்தின் எந்த நாட்களில் இவை உறவு கொள்கின்றன. பெண் கொரில்லாக்களின் மாத விலக்கு சுழற்சி மனித இனத்தைப் போன்றே 28 நாட்களாகும். தன்னுடைய 9 வயதில் பெண் கொரில்லாக்கள் பருவத்தை எட்டி இனப் பெருக்கத்திற்கு தகுதியடைகின்றன. இவற்றின் கற்ப காலம் 8.5 முதல் 9 மாதம் வரையான கால அளவாகும். தன் வாழ்நாளில் 3 முதல் 6 முறை நான்கு வருட இடைவெளியில் குட்டிப் போடுகின்றன. குட்டிகள் பெற்றெடுக்காத மலட்டு கொரில்லாக்களை விட மக்களைப் பெற்ற மகராசிகளுக்கு இவைகளிடையே நல்ல மதிப்பு உண்டு. கொரில்லாக்களின் குட்டிகள் மனிதக் குட்டிகளை விட இருமடங்கு விரைவாக தங்கள் பாரம்பரிய குணாதிசியங்களை அடைகின்றன. மனிதக் குழந்தைகள் எழுந்து நிற்கவே வருடத்தை எடுத்துக் கொள்கின்றது. இவற்றின் குட்டிகளோ தங்கள் வழிமுறைகளை விரைவில் கற்றுத் தேர்ச்சியடைகின்றன. பிறந்த குட்டிகள் 4 முதல் 5 ஆண்டுகள் வரை தன் தாயை சார்ந்தே வாழுகின்றன. பால் குடித்தும் மழை மற்றும் குளிரிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தாயின் மடியில் தஞ்சம் அடைந்தும் இரவில் தாயின் கூட்டில் அதனுடன் தூங்கியும் காலம் கழிக்கும். தன் தாய் பயணிக்கும் போது அதன் முதுகில் சவாரி செய்த வண்ணம் பயணம் செய்யும். பொதுவாக பெண் கொரில்லாக்கள் பருவமடைந்த பின் பிறந்த வீட்டை விடுத்து புதிய வீட்டில் புகுந்து கொள்கின்றது. அதாவது வேறு குழுவில் சென்று இணைந்து கொள்கின்றது. அல்லது எலி வளையானலும் தனி வளை வேண்டும் என்று நினைக்கின்றனவோ என்னவோ? தெரியவில்லை!

மைனர் ஆண் கொரில்லாக்களுடன் இணைந்து புதிய குடும்பத்தை உருவாக்கிக் கொள்கின்றன. ஆண் கொரில்லாக்கள் பருவமடைந்தவுடன் "என் வழி தனி வழி" என்ற கணக்கில் புதிய காதலியை தேடி வீடு துறந்து காடே கதியாக வேறுக் குடும்பத்தை சேர்ந்த பெண் கொரில்லாக்கள் பின்னால் லோ-லோ என்று அலைய ஆரம்பித்து விடுகின்றது. அல்லது எங்கு காதல் ஜோடி தேடி அலைவது என்ற சோம்பலில் தன் குடும்பத்தில் இருக்கும் பெண் கொரில்லாவை தள்ளிக் கொண்டு செல்லும் முயற்சியிலும் இறங்குவதுண்டு. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் இத்தகைய சந்தர்ப்பங்களில் இவற்றிற்கு உடம்பில் டின் கட்டும் நிகழ்ச்சிகளுக்கும் அங்கே குறைவு இல்லை. இத்தகைய இந்த சந்தர்ப்பங்களில் இவைகளுக்கிடையே சண்டைகள் நிகழுவதுண்டு. மேலும் சில சமயம் குட்டிகளைக் கொன்றுவிட்டு அதன் தாயை கடத்தி கொண்டு செல்லும் அகராதிப் போக்கிற்கும் அங்கே குறைவில்லை.

காமத்திற்கு அல்லது காதலுக்கு முன்பு எதுவும் துச்சம் என்ற இந்த செயல்போக்கு மனித இனங்களில் அடிக்கடி காதில் விழும் செய்திதானே. எந்த நேரத்தில் அவைகள் குடும்பத்தை விட்டு ஓட இரகசியம் பேசிக் கொள்கின்றன என்பது அவற்றிற்குதான் வெளிச்சம். அரிதாகப் பருவமடைந்த ஆண் கொரில்லாக்கள் தங்கள் குடும்பத்துடனே தங்கிக் கொள்கின்றன. தன் தந்தை இறந்தவுடன் அல்லது வயது முதிர்ந்தவுடன் தந்தை வழி தனயன் வழி என்பது போல் அந்த குடும்பத்திற்கு தலைமைக்கு வருகின்றது. இவை 35 வருடங்கள் முதல் 45 வருடங்கள் வரை உயிர் வாழக் கூடியனவாக இருப்பினும் 25 சதவிகிதம் குட்டிகள் பிறந்த இரண்டு வருடங்களில் நோய்களினால் இறந்து விடுகின்றன. இவற்றிற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப் போவது யாரோ?

கொரில்லாக்களின் அரவணைப்பைப் பாருங்கள். அதன் முகத்தில் அன்பினைப் பாருங்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறளைப் போல் இறைவன் உயிர்களிடத்தில் வைத்த உணர்ச்சி மயமான அன்பு என்னும் பண்பை எங்ஙனம் வார்த்தைகளினால் விளக்குவது. முற்றிலும் சுய சக்தியற்ற தன் சந்ததியை காக்கும் உணர்ச்சி பூர்வமான அந்த பரோபகார சிந்தனையை இவை எங்கிருந்து பரிணாமம் பெற்றன. உதாரணத்திற்கு எல்லா

உயிர்களும் ஒன்றிலிருந்து ஒன்று பரிணாமம் பெற்றன என்று வைத்துக் கொண்டாலும் உடல் ரீதியான மாற்றம் ஏற்படலாமே தவிர இந்த உணர்ச்சி பூர்வமான பண்புகளை எவ்வாறு அவைகள் பெற்றிருக்க இயலும். ஏதோ சில விஷயங்களில் காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையாய் ஒரு ஒழுங்குடன் அமையலாம். ஆனால் எல்லா விஷயங்களிலுமா அவ்வாறு நிகழ முடியும்?. சாத்தியமே இல்லை! இல்லவே இல்லை!

*(விளக்கங்களுக்கு இதே இதழில் வெளிவந்திருக்கும் குர்ஆனில் கருவளர்ச்சி என்ற தொடரைப் படித்தால் அதிகமான விளக்கங்கள் கிடைக்கும். இன்ஷாஅல்லாஹ்)*

இந்த உலகில் படைப்பினங்கள் மற்றும் உலகத்தின் ஒழுங்குபாடு எல்லா விஷயங்களும் எவ்வாறு ஒரு ஒழுங்குடனும் எந்த ஒரு முரண்பாடின்றியும் அமைய முடியும். இந்த பரிணாமத் தத்துவம் இந்த அளவிற்கு ஒரு மாயை ஏற்படுத்தியதற்கு காரணம் டார்வினை எதிர்த்த கிருஸ்துவ உலகம் அதற்கு ஒரு சரியான பதில் அளிக்காமையே ஆகும். எதிலும் பகுத்துதான் அறிவோம் என்று சொல்லும் டார்வின் வாதிகளுக்கு பதில் அளிக்க ஆயத்தம் ஆகிவிட்டனர் அறிவியல் அறிஞர்கள்.

இந்த நூற்றாண்டில் அறிவியல் உலகினை பிரமிப்பின் எல்லைக்கே இட்டுச் செல்லும், இட்டுச் செல்வதென்ன உதைத்தே துரத்தும் ஒரு துறை இருக்கிறது என்று சொன்னால் அது குரோமோசோம்களில் அடங்கியிருக்கும் ஜீன்களைப் பற்றித் மனிதனின் மரபியல் துறையாகும். மனித உடலின் 23 ஜோடி குரோமோசோம்களில் காணப்படும் இவைகள் மனிதப் படைப்பின் மூலமாக இறைவனால் படைக்கப்பட்டதாகும். இந்த சிறிய மரபியல் மூலக்கூறுகளுக்கென்று ஒரு துறை உருவாக்கப்பட்டு (Genetic Engineering) விரிவான முறையில் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. இந்தத் துறையில் இதுவரை விஞ்ஞானிகளினால் கண்டறியப்பட்ட சொற்பமான தகவல்கள் இவர்களின் கொள்கைக்கு ஆதரவளிக்கக் கூடியதாய் அமையவில்லை. மரபியல் மூலக்கூறுகளான அடினைன், குவானைன், தைமின் மற்றும் சைட்டோசின் ஆகிய இவைகள் அர்த்தமுள்ள வரிசையில் அமைந்திருக்கும் பாங்கு அறிவியலார்களை அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவற்றில் கிட்டதட்ட 5000 கோடி தகவல்கள் பதியப்பட்டுள்ளதாக மதிப்பிட்டுள்ளார்கள். இந்த ஜீன்களை மனித உடலைக் உருவாக்கும் பொறியிலாருக்கு ஒப்பாக கொள்ளலாம். இவையே ஒரு மனிதனின் உறுப்புகள், நிறம், உயரம், ஆரோக்கியம், மரபியல் பண்பு ஆகியவற்றை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணியாகும். இவற்றில் ஏதேனும் தவறுகள் ஏற்படின் பிறக்கும் பிறப்பு மனித இனமா என்பதே சந்தேகத்தை ஏற்படுத்திவிடும். இந்தத் துறை ஆராய்ச்சி மனித இனத்தின் மூலம் ஒரு ஆத்மாதான் என்ற முடிவை எட்டிவிட்டது.

மனிதன் குரங்கிலிருந்துதான் பரிணாம வளர்சி அடைந்தான் என்ற கூற்றை டார்வின் வைத்ததற்கு முக்கியக் காரணமாக அமைந்தது குரங்குகளின் தோற்றம் மற்றும் அதன் சில செயல்பாடுகள் மனிதனைப் போன்றே இருப்பதுதான் முக்கியமான காரணம் ஆகும். ஆனால் சமீப கால ஆராய்ச்சியின் முடிவுகள் மற்ற உயிரினத்தின் இரத்தத்தை மனித உடலுக்கு ஏற்ற இரத்தமாக மாற்றக் கூடிய சாத்தியம் இருக்கிறதென்றுச் சொன்னால் அது பன்றியின் இரத்தம்தான் என்று விஞ்ஞானிகள் அடித்துச் சொல்கின்றார்கள். ஆம் மனித இரத்தத்தோடு நெருங்கிய ஒற்றுமை உடையது பன்றியின் இரத்தமாகும். மேலும் பன்றியின் இதய அமைப்பு மனித இதயத்தை பெருமளவிற்கு ஒத்திருக்கின்றன. எனவே மனிதன் பரிணாமம் அடைந்தான் என்று வைத்துக்கொண்டால் மிக நெருக்கமாக வருவது பன்றிதான் என்று அறிவியலார் சொல்கின்றார்கள். இப்பொழுது சப்தநாடியும் அடங்கிய இவர்கள் என்னச் சொல்லப்போகின்றார்கள். மனித குலத்தின் மூலம் ஒன்றுதான் என்று ஏற்றுக்கொள்ளும் போது அதை படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை ஏற்கும் நிலை ஏற்படும் என்பதல்லாமல் இவர்கள் மறுப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்கின்றது. ஆரோக்கியமான ஒரு மனிதனின் உடலில் 30 டிரில்லியன் (1000 பில்லியன்ஸ் ஒரு டிரில்லியன்) செல்கள் இருப்பதாக கணக்கிட்டுள்ளார்கள். இதில் ஒவ்வொரு செல்களுக்கும் இரத்தத்தின் மூலம் ஆக்ஸிஜன் மூலக்கூறு மற்றும் உணவுச்சத்துகள் எந்த விதமான குறைவுமின்றி வினியோகம் செய்யப்படுகின்றன.

ஆனால் இன்று உலகின் 600 கோடி மக்களுக்கும் ஒரே சீராக பட்டினியின்றி மனிதர்களினால் உணவளிக்கப்படுகின்றதா? ஒரு பக்கம் ஆஸ்திரேலியாவில் பாலை கடலில் கொட்டுகின்றார்கள். அமெரிக்காவில் கோதுமையை கடலில் கொட்டுகின்றார்கள். ஐரோப்பாவில் உணவு உற்பத்தி அதிகமாகி நிலத்தை உழாமல் தரிசாக போட்டு வைக்க மானியம் வழங்கப்படுகின்றது. மறுபுறம் நிகழும் பட்டினிச் சாவுகளை எதிர் நோக்கி சோமாலியா, எத்தியோப்பியா, எரித்ரியா, ருவாண்டா, உகாண்டா போன்ற ஆப்ரிக்க நாடுகள். பசிக்கு மாங்கொட்டையை அரைத்து தின்று உயிர் விடும் மலைவாழ் இந்தியர்கள் ஒருபுறம் என்று பட்டியல் நீண்டுக் கொண்டே செல்லும். மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இத்தகைய விஷயங்களில் இவனால் ஒரு தீர்வைக் காண முடியவில்லை. சீரான வினியோகம் என்பது இதுவரை இவனைக் கொண்டு சாத்தியமற்றதாய் இருக்கின்றது. ஆனால் இறைவன் படைத்த நம் உள் உறுப்புகளில் எந்தத் தங்கு தடையுமின்றி எந்த முரண்பாடுமின்றி வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. உங்களுக்குள்ளேயே நிறைய அத்தாட்சிகள் இருக்கின்றது என்ற நித்திய ஜீவனாகிய நம் இறைவனின் வல்லமையை மனிதன் சிந்தனைச் செய்தாலே இறைவனின் அற்புதங்களை கணக்கின்றிக் காண முடியும்.

அறிவியலைப் பற்றி சிறிதளவே அறிந்தவன் இறைநம்பிக்கை இல்லாதவனாகிறான். ஆனால் அறிவியலைப் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ளவனோ, இறை நம்பிக்கையில் மிகுந்த ஈடுபாடு கொள்கிறான், என்ற ஒரு அறிஞனின் கூற்று இந்த இடத்தில் நினைவுக்கு வருவதை தவிர்க்க இயலவில்லை.

**உங்கள் அனைவரின் மீளுதலும் அவனிடமே உள்ளது. (இது) அல்லாஹ்வின் உண்மையான வாக்காகும். அவனே உங்களை ஆரம்பத்தில் படைத்தான். பின்னர் நம்பிக்கைக் கொண்டு நல்லறங்கள் செய்தவர்களுக்கு கூலியை நியாயமாக வழங்குவதற்காக மீண்டும் படைக்கின்றான். (ஏக இறைவனை) மறுப்போறுக்கு அவர்கள் மறுத்துக் கொண்டிருந்தால் கொதிக்கும் பானமும் துன்புறுத்தும் வேதனையும் உண்டு. (அல்குர்ஆன் 10:04)**

***- சகோ. உஸ்மான் அலி அவர்களின் அறிவியல் தொடர் இத்துடன் முடிவடைகிறது.***

***அறிவியல் தொடர்பான தகவல்கள் தொடரும் (இன்ஷாஅல்லாஹ்)***

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:7

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | 3 |
| | | | | | 4 | ■ | |
| | 5 | | ■ | | ■ | ■ | |
| | | | | | | | 6 |
| 7 | | | 8 | 9 | | 10 | |
| 11 | | ■ | | | | | 12 |
| ■ | ■ | ■ | | | | | ■ |
| 13 | | | | 14 | 15 | | ■ |

**இடமிருந்து வலம்**

5. கணவன், மனைவி உறவுக்கு அல்லாஹ் உவமைப்படுத்துவது (2)
7. இந்தியாவின் 4வது பெரிய நகரம் (3)**
11. கேன்சருக்கு அடிகோலிடும் பழக்கம் (2)
13. நவீன செல்போன்களில் இந்த வசதியை ஆன் செய்து வைத்திருந்தால் வைரஸ்கள் பரவ வாய்ப்புகள் உள்ளன. (4)

**வலமிருந்து இடம்**

2. சாதிக்கொடுமைகள் வேண்டாம், அன்புதன்னிற் செழித்திடும் வையம் என்று கவி பாடியவர் (3)**
3. இமாம்களில் ஒருவர் (5)
4. தி 100- என்ற புத்தகத்தின் ஆசிரியர், கடைசி எழுத்து விடுபட்டுள்ளது (6)**
6. நல்லடியார்களின் பூங்கா-ஹதீஸ்களின் தொகுப்பு- கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (7)

**மேலிருந்து கீழ்**

1. தமிழகத்தில் மக்கள் எதிர்நோக்கியிருப்பது (4)
3. குலாம் என்பதன் பொருள் (3)
8. இஸ்லாத்தில் கொடுக்க வேண்டிய கட்டாய வரி (4)
10. இதில் கிருமிகள் பரவாமல் இருக்க குளோரினைக் சேர்ப்பார்கள். (4)

**கீழிலிருந்து மேல்**

12. ஹதீஸ் கிரந்தங்களில் ஒன்று (4)
9. இதை செய்வதை சிரமம் என்று கருதாமலிருந்தால் கடமையாக்கியிருப்பேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (4)
14. மார்க்கத்தில் வாங்கவும் கூடாதது, கொடுக்கவும் கூடாதது (3)
15. குர்ஆனிற்கு இதுவும் ஒரு பெயர் (4)

**(** இக்குறியிட்ட கேள்விக்கான பதில்கள் கடந்த சுவனப்பாதை-2:6 இதழில் கிடைக்கும்)**

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **ரபியுல்-ஆகிர்** மாதம் **30**-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:5 க்கான பரிசு பெறுபவர் விபரம்

**குறுக்கெழுத்துப் போட்டி - 2:5 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்.**

**O.M. முஹம்மது மீரான்**

**குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:5 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | ல் | 2 மு | ஹ | ம் | ம | து | னீ |
| யி | ஹ் | 3 ஆ | ஷூ | ரா | ■ | 4 ஸெ | தே |
| லை | 5 ந | ன் | றி | 6 எ | ■ | ங் | த் |
| டு | ன் | தா | ஸ் | கி | 7 பா | க | ணி |
| நா | ■ | ■ | 8 ஜ | ப் | ■ | ஸூ | ரா |
| ழ் | ஜூ | ஏ | தி | த் | 9 ப | ரு | 10 இ |
| மி | கை | ங் | ல | 11 இ | த | ■ | ■ |
| 12 த | ங் | க | ம் | ■ | ர் | ப | 13 பா |